# DEPOSITION OF WITNESS

IN THE COURT OF I ADDL.DISTRICT & SESSIONS JUDGE, THOOTHUKUDI.

Case No. S.C.No.166/2024.
Prosecution witness for P.W.29.

| | | | |
|---|---|---|---|
| Name | ... திருமதி. எலிசபெத் மேரி. | Caste | ... |
| Father's/Husband Name | ... | Calling | ... |
| Village | ... | Religion | ... |
| Taluk | ... | Age | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 20.09.2025.

A1 to A3 present.

<u>முதல் விசாரணை</u>

நான் தற்போது கோவில்பட்டி மாவட்ட உரிமையியல் நீதிமன்றத்தில் தலைமை எழுத்தராக பணியில் இருந்து வருகிறேன். நான் இதற்கு முன்பு கோவில்பட்டி நீதித்துறை நடுவர் நீதிமன்றம் எண் 2ல் தலைமை எழுத்தராக பணியில் இருந்தபோது 10.04.2024 அன்று எட்டையபுரம் காவல்நிலைய குற்ற எண் 85/2024 வழக்கு சம்பந்தமாக கைப்பற்றப்பட்ட வழக்கு சொத்துக்களை பெற்று P.R.No.146/2024 என்ற எண்ணிட்டு 23 வழக்கு சொத்துக்களையும். P.R.No.239/2024 என்ற எண்ணிட்டு நான்கு வழக்கு சொத்துக்களையும் மொத்தம் 27 வழக்கு சொத்துக்களை பெற்றேன். பிறகு நீதித்துறை நடுவர் அவர்களின் உத்தரவு பெற்று குறியீடு செய்தேன். பின்னர் ஆய்வாளரின் வேண்டுகோள் கடிதத்தைப் பெற்று ரசாயன பகுப்பாய்விற்கு நீதிபதி அவர்களின் உத்தரவு பெற்று ரத்தம் படிந்த வழக்கு சொத்துக்களை அனுப்பி வைத்தேன். பின்னர் எனக்கு பின்னால் வந்த தலைமை எழுத்தர் திருமதி. பிரேமா மீதமுள்ள 9 வழக்கு சொத்துக்களை பெற்று P.R.No.280/2024 மற்றும் 281/2024 ஆகிய எண்கள் கொடுத்து குறியீடு செய்தார்கள். அதனால் இந்த வழக்கில் மொத்தம் 36 வழக்கு சொத்துக்கள் பெறப்பட்டன. இந்த வழக்கை

மொத்தம் 36 வழக்கு சொத்துக்களை 19 படிவங்கள் 91 மூலம் பெற்றுள்ளோம். அந்த படிவங்கள் 91 **அ.சா.ஆ 29 வரிசை** (எண்ணிக்கையில் 19). ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

2 ம் எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை

மேற்படி பிரேமா அவர்கள் மேற்படி நீதிமன்றத்தில் பணியில் இருந்தபோது அந்த நீதிமன்றத்தில் நான் பணியில் இல்லை. மேற்படி பிரேமா நடவடிக்கைகள் குறித்து எனக்கு நேரில் தெரியாது. அ.சா.ஆ 29 ல் படிவம் எண் 1954449, 1954451, 1954452, 1954453 என்ற எண்ணிட்டப்பட்ட படிவங்களில் நீதிமன்ற index பக்கம் எண்கள் 343, 345, 347, 349, என்று குறிப்பிடப்பட்ட படிவங்கள் 10.04.2024 அன்று நீதிமன்றத்தில் பெறப்பட்டதாக குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். அதை 05.04.2024 அன்று நீதித்துறை நடுவர் மேற்படி படிவத்தை அதை வழக்கு சொத்துக்களுடன் சமர்ப்பிக்க வேண்டுமென்று திருப்பி விட்டதாக குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். 05.04.2024 அன்று நீதித்துறை நடுவர் நீதிமன்றத்தில் பெறப்பட்டதற்கான அலுவலக முத்திரை அதில் இல்லை என்றால் சரிதான். படிவம் எண் 1933791 என்ற படிவம் 04.04.2024 அன்று தயாரிக்கப்பட்ட படிவம் 27.06.2024 அன்றுதான் நீதிமன்றத்தில் பெறப்பட்டதாக குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். அந்த படிவமும் சொத்துடன் ஆஜர் செய்யப்படவில்லை என்ற காரணத்தினால் 26.06.2024 அன்று திருப்பப்பட்டதாக குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். 1933791 என்ற எண்ணிடப்பட்ட படிவம் 04.04.2024 அன்று 01.04.2024 தேதி சம்பவத்திற்கு முன்பு பதிவான வழக்கு சம்பந்தப்பட்ட வீடியோக்கள் மற்றும் ஆடியோக்கள் பதிவு செய்யப்பட்ட பதிவுகளை வழக்கின் விசாரணைக்காக காலம் 3 ல் கண்ட சொத்தினை புலன் விசாரணை அதிகாரியால் பதிவு செய்யப்பட்டு

கைப்பற்றப்பட்ட பென்ட்ரைவ் என்றால் சரிதான். பவடிம் எண் 1933790 என்ற எண்ணிடப்பட்ட படிவம் ஒரு பத்திரத்தின் நகல் கைப்பற்றப்பட்டதாக கொடுக்கப்பட்ட படிவம் 91 என்றால் சரிதான். அதில் பத்திரத்தின் வரிசை எண் திருத்தப்பட்டுள்ளது என்றால் சரிதான். 1933785, 1933786, 1933787, 1933788, 1933789, 1933790 என்ற எண்ணிடப்பட்ட படிவங்களில் எந்த தேதியிட்டு வழக்கு சொத்துக்கள் பெறப்பட்டன என்பதற்கான அலுவலக முத்திரை இல்லை என்றால் சரிதான். அதில் நீதித்துறை நடுவரின் சுருக்கொப்பமும், தேதியும் இடப்பட்டுள்ளது. மேற்படி வழக்கு சொத்துக்களை நான் வாங்கி நீதித்துறை நடுவருக்கு சமர்ப்பித்ததாக மேற்படி படிவத்தில் உள்ள சுருக்கொப்பம் என்னுடையதல்ல என்றால் சரியல்ல. படிவங்கள் 1933785 முதல் 1933790 வரையில் மேற்படி குறிப்பிடப்பட்டுள்ள எண்களுள்ள படிவங்கள் என்னால் பெறப்பட்டதல்ல என்றால் சரிதான். மேற்படி பிரேமா பெற்றுள்ளார். நான் 15.06.2024 வரை மேற்படி நீதிமன்றத்தில் பணியில் இருந்தேன். மேற்படி ஆவணங்களை பெறப்பட்டதாக சொல்லப்படும் தேதியில் மேற்படி நீதிமன்றத்தில் நான் பணியில் இருந்து பெற்றதாக சொல்வது பொய் என்றால் சரியல்ல. அதில் உள்ள சுருக்கொப்பங்கள் என்னுடையதல்ல என்றால் சரியல்ல. ஆய்வாளர் கேட்டுக் கொண்டதற்கிணங்க மேற்படி ஆவணங்கள் குற்றப்பத்திரிக்கையுடன் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டு பிறகு மேற்படி ஆவணங்கள் முன் தேதியிட்டு கையொப்பமிட்டு திருப்பப்பட்டதற்காக நாங்கள் உதவி செய்ததால்தான் மேற்படி ஆவணங்களில் முன்னுக்குப்பின் முரணான தேதிகளும், முத்திரைகளும் உள்ளன என்றால் சரியல்ல. ஆய்வாளர் என்னை விசாரிக்கவில்லை.

மேற்படி குறுக்கு விசாரணை 1, 3 எதிரிகள் தரப்பில் ஏற்றுக் கொள்ளப்பட்டது.

Taken down before me in open court, in the presence of the Accused read over to the witness and admitted by the deponent to be correct

M THANDAVAN Digitally signed by M THANDAVAN Date: 2025.09.20 18:26:07 +0530

I Additional District & Sessions Judge,
Thoothukudi.

## DEPOSITION OF WITNESS

IN THE COURT OF I ADDL.DISTRICT & SESSIONS JUDGE, THOOTHUKUDI.

Case No. S.C.No.166/2024.

Prosecution witness for P.W.30.

| | | | |
|---|---|---|---|
| Name | ... திரு. சசிக்குமார். | Caste | ... |
| Father's/Husband Name | ... | Calling | ... |
| Village | ... | Religion | ... |
| Taluk | ... | Age | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 20.09.2025.

A1 to A3 present.

முதல் விசாரணை

நான் தற்போது கழுகுமலை காவல்நிலையத்தில் முதல்நிலை காவலராக பணியில் இருந்து வருகிறேன். நான் இதற்கு முன்பு எட்டையபுரம் காவல்நிலையத்தில் முதல்நிலை காவலராக பணியில் இருந்தபோது 02.04.2024 அன்று நிலைய குற்ற எண் 85/2024 இதச 279, 304 ஏ வழக்கு சம்பந்தப்பட்ட காயமுற்று இறந்துபோன ஆர்.கே.துரை என்பவரது பிரேதத்தை பிரேத பரிசோதனைக்காக எட்டையபுரம் காவல் ஆய்வாளர் பிரேத விசாரணை முடித்து பிரேதத்தையும், வேண்டுகோள் கடிதத்தையும் என்னிடம் ஒப்படைக்க நான் எட்டையபுரம் அரசு மருத்துவமனையில் காலை சுமார் 9 மணியளவில் ஒப்படைத்தேன். மருத்துவரிடம் பிரேதத்தை அடையாளம் காட்டி பிரேத பரிசோதனை சமயத்தில் மருத்துவருடன் இருந்தும், பிரேத பரிசோதனை முடிந்து பிரேதத்தை உறவினர்களிடம் ஒப்படைத்தேன். பின்னிட்டு இறந்துபோனவரின் மருமகனான 2ம் எதிரி, 1ம் எதிரி மூலம் லாரியை வைத்து ஆர்.கே.துரை மீது ஏற்றி கொலை செய்ததாக தெரியவந்தது. அதுகுறித்து ஆய்வாளர் என்னை விசாரித்தார். பின்னிட்டு மேற்படி

பிரிவுகளில் இருந்து இதச 302, 114 பிரிவுகளின் படி பிரிவு மாற்றம் செய்யப்பட்டது. ஆய்வாளர் என்னை இரண்டு முறை விசாரித்தார்.

2ம் எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை

பொதுவாக நிலைய விசாரணை அதிகாரி காவலர்களுக்கு அலுவல் ரீதியாக பொறுப்பு கொடுத்து வெளியில் அனுப்பும்போது அதற்கான கடவுச்சீட்டு கொடுப்பது வழக்கம் என்றால் சரிதான். எனக்கு இந்த வழக்கை பொறுத்தவரையில் மேற்படி பணிக்கு கடவுச்சீட்டு கொடுக்கப்படவில்லை என்றால் சரியல்ல கடவுச்சீட்டு கொடுக்கப்பட்டது. கடவுச்சீட்டை பணி முடிந்த பிறகு ஆய்வாளரிடம் ஒப்படைத்தேன். மேற்படி பணிக்காக எத்தனை மணிக்கு கடவுச்சீட்டு எனக்கு கொடுக்கப்பட்டது என்றும், பணியை முடித்துவிட்டு எத்தனை மணிக்கு ஆய்வாளரிடம் கடவுச்சீட்டை ஒப்படைத்தேன் என்றும் ஆய்வாளர் விசாரணையில் சொன்னேன். நான் சொன்ன நேரத்திலும், சொன்ன விதத்திலும் எந்த பொறுப்பும் எனக்கு கொடுக்கப்படவில்லை என்றும், கடவுச்சீட்டும் கொடுக்கப்படவில்லை என்றும், அதனால்தான் அதை நான் ஆய்வாளரிடம் ஒப்படைக்கவில்லை என்றும் சொன்னால் சரியல்ல. அதனால்தான் அந்த சங்கதி குறித்து முதல் விசாரணையிலும் சொல்லவில்லை என்றால் சரியல்ல. அதனால்தான் மேற்படி கடவுச்சீட்டை ஆய்வாளர் நீதிமன்றத்திலும் ஒப்படைக்கவில்லை என்றால் சரியல்ல. ஆய்வாளர் தாக்கல் செய்த இந்த வழக்கில் என்னை சாட்சியாக உருவாக்கி ஆய்வாளர் கேட்டுக் கொண்டதற்கிணங்க பொய்சாட்சி சொல்கிறேன் என்றால் சரியல்ல.

மேற்படி குறுக்கு விசாரணை 1, 3 எதிரிகள் தரப்பில் ஏற்றுக் கொள்ளப்பட்டது.

Taken down before me in open court, in the presence of the Accused read over to the witness and admitted by the deponent to be correct

M THANDAVAN Digitally signed by M THANDAVAN Date: 2025.09.20 18:26:15 +0530

I Additional District & Sessions Judge,
Thoothukudi.

**DEPOSITION OF WITNESS**

IN THE COURT OF I ADDL.DISTRICT & SESSIONS JUDGE, THOOTHUKUDI.

Case No. S.C.No.166/2024.

Prosecution witness for P.W.31.

| | | | |
|---|---|---|---|
| Name | ... **திரு. முத்துராஜேஷ்.** | Caste | ... |
| Father's/Husband Name | ... | Calling | ... |
| Village | ... | Religion | ... |
| Taluk | ... | Age | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 20.09.2025.

A1 to A3 present.

முதல் விசாரணை

நான் தற்போது எட்டையபுரம் காவல்நிலையத்தில் தலைமை காவலராக பணியில் இருந்து வருகிறேன். நான் இதற்கு முன்பு அதே காவல்நிலையத்தில் முதல்நிலை காவலராக பணியில் இருந்தபோது 23.04.2024 அன்று கோவில்பட்டி நீதித்துறை நடுவர் நீதிமன்றம் எண் 2 லிருந்து ஒரு மூடி முத்திரையிடப்பட்ட கவர், மூடி முத்திரையிடப்பட்ட அட்டைப் பெட்டி ஆகியவற்றை திருநெல்வேலி வட்டார தடய அறிவியல் ஆய்வகத்தில் நீதிமன்றத்திலிருந்து பெற்ற கடித்துடன் ஒப்படைத்தேன். 10.05.2024 அன்று மேற்படி நீதிமன்றத்திலிருந்து மூடி முத்திரையிடப்பட்ட ஒரு கவர் மற்றும் மூடி முத்திரையிடப்பட்ட ஒரு அட்டைப் பெட்டி ஆகியவற்றை பெற்று 11.05.2024 அன்று திருநெல்வேலி வட்டார தடய அறிவியல் ஆய்வகத்தில் ஒப்படைத்தேன். 05.06.2024 அன்று மேற்படி நீதிமன்றத்திலிருந்து மூடி முத்திரையிடப்பட்ட ஒரு கவர் மற்றும் மூடி முத்திரையிடப்பட்ட ஒரு அட்டைப் பெட்டி ஆகியவற்றை பெற்று 06.05.2024 அன்று சென்னை தடய அறிவியல் ஆய்வகத்தில் ஒப்படைத்தேன். ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

குறுக்கு விசாரணை

ஆய்வாளர் என்னை எந்த தேதியில் விசாரித்தார் என்றால் ஞாபகமில்லை. நான் கடைசியாக  பொருட்களை வாங்கி ஒப்படைத்த தேதியிலிருந்து ஒரு வாரம் கழித்து ஆய்வாளர் என்னை விசாரித்தார். ஆய்வாளர் விசாரணையில் முதல் விசாரணையில் சொன்ன தேதிகளை குறிப்பிட்டுத்தான் நான் வாக்குமூலம் கொடுத்தேன். மேற்படி பணிகளுக்கு எனக்கு கடவுச்சீட்டு கொடுக்கப்படவில்லை. எனக்கு பேருந்து வாரண்ட் கொடுக்கப்பட்டது. ஆய்வாளர் என்னை விசாரித்தபோது நான் மேற்படி ஊர்களுக்குச் சென்று வந்ததற்கான பேருந்து வாரண்டின் அடிக்கட்டையை கொடுத்தேன். நான் சொன்ன தேதியிலும், சொன்ன விதத்திலும் மேற்படி வழக்கு சொத்துக்களை என்னிடம் ஒப்படைப்பதற்கு பணிநியமனம் செய்யப்பட்டதாக சொல்வது பொய் என்றால் சரியல்ல. நான் நீதிமன்றத்திலிருந்து பொருட்களை பெற்றுக் கொள்ளவும் இல்லை என்றும், தடய அறிவியல் ஆய்வகத்திலும் ஒப்படைக்கவில்லை என்றும் சொன்னால் சரியல்ல. இந்த வழக்கில் உள்ள பாதகமான சூழ்நிலைகளை சரி செய்வதற்காக ஆய்வாளர் என்னை சாட்சியாக உருவாக்கியுள்ளார் என்றால் சரியல்ல. நான் மேற்படி பணி செய்யவில்லை என்பதால்தான் ஆய்வாளர் விசாரணையில் சொன்ன வாக்குமூலத்திற்கு முரணாக தற்போது சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

மேற்படி குறுக்கு விசாரணை 1, 3 எதிரிகள் தரப்பில் ஏற்றுக் கொள்ளப்பட்டது.

Taken down before me in open court, in the presence of the Accused read over to the witness and admitted by the deponent to be correct

M THANDAVAN
Digitally signed by M THANDAVAN
Date: 2025.09.20 18:26:25 +0530

I Additional District& Sessions Judge,
Thoothukudi.

**DEPOSITION OF WITNESS**

IN THE COURT OF I ADDL.DISTRICT & SESSIONS JUDGE, THOOTHUKUDI.

Case No. S.C.No.166/2024.

Prosecution witness for P.W.32.

| | | | |
|---|---|---|---|
| Name | ... **திருமதி. சந்தனமாரி.** | Caste | ... |
| Father's/Husband Name | ... | Calling | ... |
| Village | ... | Religion | ... |
| Taluk | ... | Age | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 20.09.2025.

A1 to A3 present.

<u>முதல் விசாரணை</u>

நான் தற்போது எட்டையபுரம் காவல்நிலையத்தில் தலைமை காவலராக பணியில் இருந்து வருகிறேன். நான் இதற்கு முன்பு அதே காவல்நிலையத்தில் தலைமை காவலராக பணியில் இருந்தபோது ஏப்ரல் 2024 முதல் ஆய்வாளர் இந்த வழக்கில் புலன் விசாரணை செய்தபோது நான் அவருக்கு உதவியாக இருந்து சாட்சிகளின் வாக்குமூலங்களை ஆய்வாளர் சொல்லச் சொல்ல நான் தட்டச்சு செய்து கொடுத்தேன். நிலையம் வந்து வாக்குமூலங்களின் பிரதி எடுத்துக் கொடுத்தேன். ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

2ம் எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை

நான் நிலையத்தில் நிலையாக இருந்து செய்யக்கூடிய பணி வலைதளத்தில் குற்றப் பத்திரிக்கைகளை பதிவேற்றம் செய்வதும், முதல் தகவல் அறிக்கைகளைப் பதிவேற்றம் செய்வதும், நிலையத்திற்கு வரும் அலுவலக மின்னஞ்சல்களை படித்து பிரதி எடுத்து அலுவலகத்தில் வைப்பதும் என் பணிகள் என்றால் சரிதான். மேற்படி பணி காவல் கண்காணிப்பாளரால் நிலையத்தில் இருக்கும் ஒவ்வொரு ஊழியருக்கும் நியமிக்கப்பட்ட சிறப்பு பணி என்றால் சரிதான். எனக்கு வெளி

அலுவல்களுக்கு பணி என்றால் அதை காவல்துறை கண்காணிப்பாளர்தான் உத்தரவு போட வேண்டுமென்றால் சரிதான். எனக்கு நிலையத்திற்கு வெளியே இருக்கும் பணிக்கு மாவட்ட கண்காணிப்பாளர் எந்த உத்தரவும் பிறப்பிக்கவில்லை என்றால் சரிதான். காவல்நிலையத்திற்கு சொத்துப் பதிவேடு என்று ஒரு பதிவேடு பராமரிக்கப்படுகிறது என்றால் சரிதான். அதில் மடிக்கணினி இருப்பதாக குறிப்பிடப்படவில்லை என்றால் சரியல்ல. காவல்நிலையத்திற்கு மடிக்கணினி பயன்பாடு இல்லை என்றால் சரியல்ல. முதல் விசாரணையில் சொன்ன பணி எனக்கு கொடுக்கப்படவில்லை என்றும், நானும் அதை செய்யவில்லை என்றும் சொன்னால் சரியல்ல. வழக்கு விசாரணை காலம் எந்த தேதியில் ஆரம்பிக்கப்பட்டு எந்த தேதி முடிக்கப்பட்டது என்றால் 01.04.2024 ல் ஆரம்பிக்கப்பட்டு 02.07.2024 ல் முடிக்கப்பட்டது. நான் ஆய்வாளர் கேட்டுக் கொண்டதற்கிணங்க பொய்சாட்சி சொல்கிறேன் என்றால் சரியல்ல.

மேற்படி குறுக்கு விசாரணை 1, 3 எதிரிகள் தரப்பில் ஏற்றுக் கொள்ளப்பட்டது.

Taken down before me in open court, in the presence of the Accused read over to the witness and admitted by the deponent to be correct

M THANDAVAN

Digitally signed by M THANDAVAN
Date: 2025.09.20 18:26:33 +0530

I Additional District& Sessions Judge,
Thoothukudi.

## DEPOSITION OF WITNESS

IN THE COURT OF I ADDL.DISTRICT & SESSIONS JUDGE, THOOTHUKUDI.

Case No. S.C.No.166/2024.

Prosecution witness for P.W.33.

| | | | |
|---|---|---|---|
| Name | ... **திரு. துரைச்சாமி.** | Caste | ... |
| Father's/Husband Name | ... | Calling | ... |
| Village | ... | Religion | ... |
| Taluk | ... | Age | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 20.09.2025.

A1 to A3 present.

<u>முதல் விசாரணை</u>

நான் தற்போது கழுகுமலை காவல்நிலையத்தில் உதவி ஆய்வாளராக பணியில் இருந்து வருகிறேன். நான் கடந்த 01.04.2024 அன்று எட்டையபுரம் காவல்நிலையத்தில் உதவி ஆய்வாளராக கூடுதல் பொறுப்பில் இருந்தபோது 19.30 மணியளவில் எட்டையபுரம் காவல்நிலைய பொறுப்பில் இருந்தபோது அ.சா.1 நிலையம் ஆஜராகி கொடுத்த அ.சா.ஆ 1 புகாரைப் பெற்று நிலைய குற்ற எண் 85/2024 இதச 279, 304 ஏ படி வழக்கு பதிவு செய்தேன். அந்த முதல் தகவல் அறிக்கை **அ.சா.ஆ 30**. பிறகு அந்த முதல் தகவல் அறிக்கையையும், புகாரையும் நீதித்துறை நடுவர் எண் 2 கோவில்பட்டி அவர்களுக்கு அனுப்பியும், மற்ற நகல்களை சம்பந்தப்பட்ட உயர் அதிகாரிகளுக்கு அனுப்பியும், ஒரு நகலை விசாரணைக்காக ஆய்வாளரின் பார்வைக்கு வைத்தேன். பின்னர் 03.04.2024 அன்று ஆய்வாளர் TN 27 AK 3792 பதிவெண் கொண்ட டிப்பர் லாரியையும், உரிமையாளர் பெயர், விலாசத்தை நிலைய இ செல்லான் மூலம் பிரதி எடுத்து காவல் ஆய்வாளருக்கு அனுப்ப சொன்னதன்பேரில் எட்டையபுரம் காவல்நிலைய மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்பினேன். 04.04.2024 அன்று இவ்வழக்கினை இதச 279, 304 ஏ

லிருந்து 302, 114 பிரிவுகள் படி மாற்றம் செய்ததாக தெரிந்து கொண்டேன். இது சம்பந்தமாக ஆய்வாளர் என்னை விசாரித்தார். மேற்படி வாகனத்தின் உரிமையாளர் பெயர், விலாசம் குறித்து வலைதளம் மூலமாக நான் பிரதி எடுத்தற்கான சான்றிதழ் **அ.சா.ஆ 31**. இந்த ஆவணம் எதிரிகள் தரப்பில் ஆட்சேபனையுடன் குறியீடு செய்யப்பட்டது. அதில் மேற்படி வாகனத்தின் உரிமையாளர் பெயர் நாகராஜ், த/பெ. செல்லையா, தோல்மாலைப்பட்டி, கருப்பூர், எட்டையபுரம் என பதிவு செய்யப்பட்டிருந்தது. மேற்படி வாகனத்தின் பதிவு எண் TN 21 AK 3792. ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

2ம் எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை

அ.சா.ஆ 31 என்ன வகைக்காக தயாரிக்கப்பட்ட ஆவணம் என்றும், அதன் சாட்சிய மதிப்பு என்னவென்றும் எனக்கு தெரியாது என்றால் சரியல்ல தெரியும். எங்கள் அலுவலகத்தில் நான் தகவல் பார்த்ததாக சொல்லும் இ–செல்லான் இயந்திரம் என்பது மோட்டார் வாகன விதிமீறல்களுக்கு அபராதத்திற்கான செல்லான் வழங்கும் இயந்திரம் என்றால் சரிதான். ஆனால் அந்த இயத்திரத்தில் வாகனத்தின் பதிவு எண்ணை பதிவு செய்தால் வாகனத்தின் உரிமையாளர் பெயர், விலாசம் தெரிந்து கொள்ளலாம். அந்த இயந்திரம் கையடக்கமான இயந்திரம். அந்த இயந்திரம் எந்த நிறுவனத்தின் இயந்திரம் என்றால் பார்த்தால்தான் சொல்லமுடியும். நான் இந்த சம்பவம் நடந்ததாக சொல்லும் காலத்தில் எட்டையபுரம் காவல்நிலையத்தில் நான் அயல் பணியாக இருந்தேன். அங்கு நிரந்தர பணியில் இல்லை. நான் எடுத்ததாக சொல்லும் இ–செல்லான் எண் அ.சா.ஆ 31ல் இல்லை என்றால் சரிதான். கணினி கட்டுப்பாடு என் தனிப்பட்ட முழுமையான கட்டுப்பாட்டில் இல்லை. அதற்கு CCTNS பதிவாளர்கள் தனியாக இருக்கிறார்கள் என்றால் சரிதான்.

நான் கணினி படிப்பு எதுவும் படிக்கவில்லை. கணினி கட்டமைப்பு சார்ந்த விசயங்கள் எனக்குத் தெரியாது. கணினி கட்டமைப்பு சார்ந்து உள்ள விசயங்களை நான் அ.சா.ஆ 31ல் குறிப்பிடவில்லை. அ.சா.ஆ 31ல் நீதிமன்றத்தில் பெறப்பட்டதற்கான அலுவலக முத்திரை இல்லை. அ.சா.ஆ 31 சான்றை வழங்க எனக்கு தகுதியில்லை என்றால் சரியல்ல. அ.சா.ஆ 1 மற்றும் அ.சா.ஆ 30 ஆவணங்களை மறுநாள் அதாவது 02.04.2024 அன்று வழக்கமாக நீதிமன்றத்திற்கு செல்லும் காவலர்கள் மூலம் கொடுத்தனுப்பினேன் என்றால் சரிதான். அன்றே நீதிமன்ற காவலர் எடுத்துச் சென்று ஒப்படைத்துவிட்டார். அ.சா.ஆ 1 மற்றும் 30ல் நீதித்துறை நடுவர் 04.04.2024 அன்று பெற்றதாக சுருக்கொப்பமிட்டுள்ளார் என்றால் சரிதான். அ.சா.ஆ 1ல் சட்டப்பிரிவு அடிக்கப்பட்டு திருத்தி எழுதப்பட்டுள்ளது என்றால் சரிதான். அந்த திருத்தத்திற்கு சுருக்கொப்பம் இல்லை. அ.சா.ஆ 1 மற்றும் 30ல் யார் மூலமாக மேற்படி ஆவணங்கள் நீதிமன்றத்திற்கும் உயர் அதிகாரிகளுக்கும் எடுத்துச் செல்லப்பட்டதற்கான குறிப்பு இல்லை. எத்தனை மணிக்கு ஆய்வாளரிடம் ஒப்படைக்கப்பட்டது என்ற குறிப்பும் அதில் இல்லை. என்னால் ஆய்வாளரிடம் எந்த தேதியில் ஒப்படைக்கப்பட்டது என்ற விபரம் எனக்கு தெரியாது என்றால் சரியல்ல. 01.04.2024 அன்று 20.30 மணிக்கு சம்பவ இடம் சென்று சம்பவ இடத்தில் ஒப்படைத்தேன். அ.சா.ஆ 1ஐ அ.சா1 நிலையத்தில் கொடுக்கும்போதுதான் சம்பவம் பற்றி தெரியவந்தது. நான் இருந்தது ரோந்து பணி. ஆய்வாளர் எத்தனை மணிக்கு சம்பவ இடத்திற்கு போனார் என்றும், அவர் எந்த விதத்தில் தகவல் பெற்றார் என்றும் எனக்குத் தெரியாது. ஆய்வாளர் என்னிடம் நான் வெளிப்பணியில் இருந்தபோது தகவல் சொல்லி நிலையம் சென்று முதல் தகவல் அறிக்கை பதிவு செய்து கொண்டு வந்து கொடுக்க வேண்டுமென்று சொன்னதன் அடிப்படையில் நான் வழக்கு பதிவு

செய்தேன் என்றால் சரிதான். சம்பவ இடத்திற்கு சென்று ஆய்வாளரிடம் முதல் தகவல் அறிக்கையை ஒப்படைத்தேன். இரவு சுமார் 8.30 மணியளவில் 01.04.2024 அன்று ஆய்வாளரிடம் ஒப்படைத்தேன். எங்கள் காவல்நிலையத்தில் நிலைய எழுத்தர் இருக்கிறார் என்றால் சரிதான். மற்ற அதிகாரிகள் வெளியில் சென்றிருந்தால் நிலையத்திற்கு பொறுப்பு எழுத்தர்தான் என்றால் சரிதான். அ.சா.ஆ 30 வழக்கு விபத்து வழக்காக பதிவு செய்யப்பட்டது. அந்த வழக்கை பதிவு செய்வதற்கு நிலைய எழுத்தருக்கே அதிகாரம் உள்ளது என்றால் சரிதான். நான் சொன்ன நேரத்திலும், சொன்ன தேதியிலும் நான் காவல்நிலையத்தில் இல்லை என்றால் சரியல்ல. அ.சா.ஆ 1 புகாரை நான் பெற்றதாகவும், அ.சா.ஆ 30 வழக்கை நான் பதிவு செய்தததாகவும் சொல்வது பொய் என்றால் சரியல்ல. இ–செல்லான் இயந்திரத்தில் லாரியின் உரிமையாளர் பெயர் மற்றும் விபரத்தை எடுத்தற்கான இ–செல்லானை ஆய்வாளரிடம் ஒப்படைத்ததற்கு எந்த ஆதரவும் நான் பிறப்பிக்கவில்லை என்றால் சரிதான். இ–செல்லானும் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்படவில்லை என்றால் சரிதான். இ–செல்லான் இயந்திரம் மூலமாக வாகனத்தின் உரிமையாளர் பெயர் மற்றும் விபரங்களை சரிபார்த்து உறுதி செய்து கொடுத்ததாக சொல்வது பொய் என்றால் சரியல்ல. என்னை ஆய்வாளர் விசாரித்ததாக சொல்வதும், நான் சொன்ன தேதியில், சொன்ன நேரத்தில் ஆய்வாளரிடம் வழக்கு கோப்பை ஒப்படைத்ததாக சொல்வதும் பொய் என்றால் சரியல்ல. நான் ஆய்வாளர் கேட்டுக் கொண்டதற்கிணங்க பொய்யாக சாட்சி சொல்கிறேன் என்றால் சரியல்ல.

மேற்படி குறுக்கு விசாரணை 1, 3 எதிரிகள் தரப்பில் ஏற்றுக் கொள்ளப்பட்டது.

Taken down before me in open court, in the presence of the Accused read over to the witness and admitted by the deponent to be correct

M THANDAVAN

Digitally signed by M THANDAVAN
Date: 2025.09.20 18:26:45 +0530

I Additional District & Sessions Judge,
Thoothukudi.